கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி

நாள்: 03.12.2024. அ.வ.எண். 46/2023. வா.சா.1 .சுரேஷ்குமார் த/பெ, ராமசாமி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் ராமலதா காம்ப்ளக்ஸ், சர்வம் தியேட்டர் எதிரில், கிணத்துக்கடவு விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன் என்பதை நிரூபிக்க ஆதார் அட்டை, வாக்காளர் அட்டை, ஓட்டுநர் உரிமம்போன்ற ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்தேன். ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.A. History படித்துள்ளேன். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் இன்சூரன்ஸ் ஏஜென்சியாக இருக்கிறேன். நான் எத்தனை வங்கியில் கணக்கு வைத்துள்ளேன் என்றால் Bank of Baroda, Fedrel Bank, Kinathukadavu Branch. வாதி எந்த தேதியில் பணம் கேட்டார் என்ற விவரத்தை எனது வழக்குரையிலோ, முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

2) பிரதிவாதி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் சொந்த வண்டி வைத்து ஓட்டுநராக வேலை செய்துவருகிறார். அதே போல் என்ன தேவைக்காக பிரதிவாதி பணம் கேட்டார் என்ற விவரத்தை எனது வழக்குரையிலோ, முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி யார் முன்னிலையில் பணம் கேட்டார் என்றும்,

ஒப்பம்/- (ஆர். சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

யார் முன்னிலையில் நான் பணம் கொடுத்தேன் என்ற விவரத்தை எனது வழக்குரையிலோ, முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

3) பிரதிவாதிக்கு பணம் சாட்சிகள் முன்னிலையில் கொடுத்தேன் என்றும் அதை சாட்சிகள் முன்னிலையில் பிரதிவாதி பெற்றுக்கொண்டு சாட்சிகள் முன்னிலையில் காசோலை வழங்கினார் என்று எனது பிரமாண பத்திரிக்கையில் நான் கூறவில்லை என்றால் சரிதான். கிணத்துக்கடவில் எனக்கு வங்கிக் கணக்கு இருந்தும் நான் தாக்கல் செய்துள்ள வா சா ஆ 2 கோயமுத்தூர் கிளையில் இருந்து திருப்பப்பட்டதற்கான குறிப்பாணை உள்ளது என்றால் நான் கிணத்துக்கடவு கிளையில் தான் தாக்கல் செய்தேன் காசோலை எங்கு Clear ஆனது என்று எனக்கு தெரியாது. எனது வழக்குரையிலும், முதல் விசாரணை சாட்சியத்திலும் கோயமுத்தூர் கிளையில் காசோலையை தாக்கல் செய்ததாக கூறியிருந்தால் தவறு என்றால் சரிதான் பின்னிட்டு சாட்சி 3 வருடங்கள் ஆகிவிட்டதால் தனக்கு ஞாபகமில்லை என்று கூறினார்.

4) வழக்கின் பிராதில் பிரதிவாதி 2 மாதத்தில் பணத்தை திருப்பி தருவதாக கூறியுள்ளேன் ஆனால் எனது பிரமாண பத்திரிக்கையில் 3 மாதத்தில் பணத்தை திருப்பி தருவதாக கூறியுள்ளேன் அதில் எது சரியானது என்றால் அதிகபட்சம் 3 மாதத்தில் தருவதாக கூறினார்,. மேற்கண்ட விவரத்தை நான் எனது வழக்குரையிலும், பிரமாண பத்திரிக்கையிலும் கூறவில்லை என்றால் சரிதான். 15.11.2019 ம் தேதியன்று பிரதிவாதிக்கு நான் கடன்

ஒப்பம்/- (ஆர். சுஜாதா).
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி

கொடுத்ததாக கூறியுள்ள நிலையில் அன்றைய தினம் நான் பிரதிவாதியை சந்திக்கவே இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி ஓட்டுநர் என்பதால் அன்றை தினம் அவர் ஊரிலேயே இல்லை என்றால் சரியல்ல.

5) பிரதிவாதியிடம் எத்தனை முறை சென்று கடனை திருப்பி கேட்டேன் என்றால் பலமுறை கேட்டேன் 28.01.2019 ம் தேதியன்று காசோலை வழங்கினார் பின்னிட்டு வாதி நவம்பர் 2019 ம் தேதியன்று கடன் பிரதிவாதி வாங்கினார் என்றும் 28.01.2020 ம் தேதியன்று காசோலை வழங்கியதாக கூறினார். பிரதிவாதி ஓட்டுநர் என்பதால் அவருக்கு எழுதப்படிக்க தெரியாது என்றால் சரியல்ல. ரூ 1 லட்சம் கடனாக கொடுத்ததாக சொல்லப்படும் தொகைக்கு வட்டி எவ்வளவு என்றால் வட்டி எதுவும் பேசவில்லை. காசோலை கடந்த பிப்ரவரி மாதம் 2020 ம் ஆண்டு திருப்பப்பட்டதில் இருந்து இந்த தாவா தாக்கல் செய்யும் வரை பிரதிவாதியின் பேரில் நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் அனுப்பியுள்ளேன்.

6) பிரதிவாதியும், நானும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் பக்கத்து ஊர்க்காரர்கள் ஆவோம். பிரதிவாதி எனக்கு முன் பின் அறிமுகம் இல்லாதவர் என்றால் அறிமுகம் ஆனவர் தான். பிரதிவாதி சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு என்னிடம் ரூ 25 ஆயிரம் கடன் வாங்கியிருந்தார்என்றும் அதை மாதம் வட்டி 100 க்கு ரூ.3 வட்டி வீதம் 2014 ம் ஆண்டே மேற்கண்ட தொகையை முழுவதுமாக பிரதிவாதி கொடுத்துவிட்டார் என்றும், அது போல் ரூ.25

ஒப்பம்/- (ஆர். சுஜாதா).

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.

பொள்ளாச்சி

ஆயிரம் கடன் வாங்கிய போது பிரதிவாதி பொறுப்பிற்காக கொடுத்த நிரப்பப்படாத காசோலை தான் இந்த தாவாவில் தாக்கல் செய்துள்ள காசோலை என்றால் சரியல்ல. பிரதிவாதி மேற்கண்ட ரூ.25 ஆயிரத்தை திருப்பி கொடுத்துவிட்டு காசோலையை கேட்ட போது காசோலையை தவறுதலாக எங்கோ வைத்துவிட்டேன் என்றும் அதை தேடி தருவதாக கூறினேன் என்றால் சரியல்ல. காசோலை திருப்பபட்டதில் இருந்துஇந்த தாவா தாக்கல் செய்யும் வரை பிரதிவாதியின் மீது வேறு எந்த நடவடிக்கையும் எடுக்காததற்கு காரணம் நான் அதுபோல் தொகை எதுவும் கொடுக்காததால் தான் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் பிரதிவாதி என்னிடம்இருந்து எவ்வித தொகையும்பெறவில்லை என்றும் அதற்காக 28.01.2020 தேதியன்று காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 28.01.2020 தேதியன்று பிரதிவாதி ஊரிலேயே இல்லை என்றால் சரியல்ல. வழக்கானது உண்மைத்தன்மை இல்லை என்றும் பிரதிவாதியை அநியாயமாக மிரட்டி பணம் பறிக்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்,அதனால் தான் சாட்சிகளின் விவரங்கள் குறித்து எனது வழக்குரையிலும், முதல் விசாரணை சாட்சியத்திலும் கூறவில்லை என்றால் சாட்சிகள் உள்ளார்கள் ஆஜர் படுத்த தயாராக உள்ளேன். காசோலையில் உள்ள கையெழுத்து பிரதிவாதி உடையது அல்ல என்றால் அது எனக்கு தெரியாது.

ஒப்பம்/- (ஆர். சுஜாதா).

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.

பொள்ளாச்சி.